'உயர்கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டங்கள்' போன்ற 'திராவிட மாடல்' அரசின் முன்னோடித் திட்டங்களால்

உயர் கல்வியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

திருச்சியில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் - உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!

திருச்சி, நவ.14-

உயர்கல்வியின் வளர்ச்சிக்கு முதல மைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள திட் டங்களின் செயல்பாடுகள் குறித்தும் அதனை மேலும் வளர்த்திட வேண்டிய விதம் குறித்தும் நடைபெற்ற பங்களிப் போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் உரை யாற்றிய உயர் கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி. செழியன், "உயர் கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய் வுக் கூட்டம் – போன்ற, திராவிட மாடல் அரசின் முன்னோடித் திட்டங்களால் உயர்கல்வித்துறையில் இந்தியாவி லேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமா கத் திகழ்கிறது" என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:

பங்களிப்போர் கூட்டத்தின் முக் கியக் குறிக்கோள் அரசுக்கும். பங்க ளிப்போருக்கும் உள்ள இடைவெ ளியை குறைத்து, அரசின் திட்டங்கள், பங்களிப்போர் அனை வருக்கும் நல்ல முறையில் சென்று அடைவதற்கு உண்டான ஒரு இணைப்புப் பாலத்தை ஏற்படுத்து வது தான். அரசின் திட்டங்கள் என் னென்ன? அவைகள் பங்களிப் போரை நல்ல முறையில் சென்று சேருகின்றதா? என்பதை அறியவும், குறை, நிறைகளை அறிந்து நிவர்த்தி செய்வதற்காகவும் உயர்கல்வித் துறை சார்பில் பங்களிப்போர் கூட் டம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு அரசின் முக்கியமான குறிக்கோள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும், அனைத்துத் திறனும் சென்று அடைய வேண்டும் என்பதுதான். இதற்காக அரசு பல நல்ல சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்ப டுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்கள் நல்ல முறை யில் செயல்பட வேண்டுமானால் தமிழ்நாடு அரசும், கல்லூரி நிர்வாகமும், ஆசிரியர் பெருமக்க ளும், பெற்றோர்களும், மாணவச் சமூகமும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் அனைத் துத் திட்டங்களும் நல்ல முறையில் பயனாளிகளைச் சென்றடையும். அதற்காக பங்களிப்போருடன் கலந்து உரையாடி குறை, நிறைகளைத் தெரிந்து கொள்வது தான் இந்தக் கூட் டத்தின் நோக்கமாக உள்ளது.

அரசின் நிர்வாகம் மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் அரசு, பங்களிப் போரை நேரில் சந்தித்து அவர்களு டன் கலந்து உரையாட வேண்டும் என்பது குறிக்கோள். மேலும் மாண வர்கள், பெற்றோர்கள், தொழில் நிறுவனங்கள், ஆசிரியர்கள் அவர்க ளுடைய தேவை என்ன? என்பதை யும் நிர்வாகத்தை மேலும் திறன்பட நடத்துவதற்கு அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு அதன்படி நிர்வாகம் செய்ய வேண் டும் என்பதும் முதல்வருடைய ஆணையாகும். அதனைச் செயல்ப டுத்த இந்தக் கூட்டம் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. மேலும் அரசின் திட்டங்கள் நல்ல முறையில் செயல் படுகின்றனவா? என்பதை அறிந்து கொள்வதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

களப்பணிகள்!

நல்ல நிர்வாகம் என்பது களப்ப ணிகளில் நேரடியாக மக்களிடம் செல்வது என்பதாகும். அமைச்சர் கள், உயர் அலுவலர்கள் எல்லோ ரும் பங்கேற்று பயனாளிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொள்வது தான். முடிவில் அரசின் திட்டங்கள் குறித்து ஒரு தெளிவான எண்ணம்

அனைவருக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அரசுக்கும். நிர்வாகத்திற்கும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே ஒரு இணக்கமான நல்லுறவு ஏற்பட வேண்டும். அரசு எப்போதும் மாண வர்களுக்காகவும். கல்லூரி நிர்வாகத்திற்காகவும். பெற்றோர்க ளுக்காகவும் உதவி செய்யத் தயா ராக இருக்கிறது என்ற எண்ணம் ஏற் பட வேண்டும் என்பவை இந்தக் கூட்டத்தின் முடிவில் ஏற்படும் நன் மைகள் ஆகும்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உதவி கல்லூரிகள் மற்றும் சுய நிதி கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரி யர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியா ளர்கள், தொழில் நிறுவனத்தினர், மாணாக்கர்கள், பெற்றோர்கள், 7.5 சதவீத இட ஒதுக்கிட்டில் சேர்க் கைப்பெற்ற மாணாக்கர்கள், மாற் றுத்திறனாளிகள், நான் முதல்வன். புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன், போன்ற முதலமைச்சரின் முத்தான திட்டங்களினால் பயன்பெற்ற மாணாக்கர்கள் கலந்து கொண்டு தங்களது அரிய கருத்துக்களை எடுத் துரைத்தனர். இதில் பல மாணாக்கர் கள் மேற்படி திட்டங்களின் மூலம் தான் தாங்கள் உயர் கல்வி வாய்ப்பைப் பெற முடிந்தது என்று உள்ள நேகிழ்வுடன் தெரிவித்தது டன் மேற்படித் திட்டங்களை தங்க ளுக்கு அளித்த முதலமைச்சர் அவர்க ளுக்கு தங்களது நெஞ்சான நன்றியினைத் தெரியப்படுத்தியது மிகவும் நெகிழ்ச்சி அடைந்த தருண மாக இருந்தது. மேலும் மாணாக்கர் கள் இந்தத் திட்டங்கள் இன்னும் பல கிராமப்புற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சென்றடைய வில்லை, இதனை அவர்களும் பயன் படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய உயர்கல்வித் துறை சார்பாக உரிய விழிப்புணர்வு களை ஏற்படுத்த வேண்டும்.

முதல்வரின் தாயுள்ளம்!

இந்த 7.5 சதவீத இட ஒதுக்கீடு என்பது நீட் தேர்வினால் நமது கிரா மப்புற மாணவர்கள் தங்களது உயர் கல்வியினைப் பெற இயலாத நிலை யினைக் கருத்தில் கொண்டு முந் தைய அரசால் மருத்துவ மாணவர்க ளுக்கு மட்டும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. இத னால் இட ஒதுக்கீடு பெற்ற ஒரு மாணவி இந்த இட ஒதுக்கீட்டினால் படிக்க இடம் கிடைத்தும் போதிய வசதி இல்லாததால் மருத்துவப் படிப்பைத் தொடர இயலவில்லை எனத் தெரிவித்தபோது அப்போ தைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதல்வரும் ஆன நமது முதலமைச்சர் இதனைக் கனிவுடன் கேட்டுக் கொண்டு அப்போதே அந்த மாணவிக்கு முழு கல்விச் செல வையும் தானே ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தவுடன் மருத்துவப் படிப்பு மட் டுமல்லாமல் பள்ளிப்படிப்பு முடிந்து தொழில் கல்வியில் பொறியியல், விவசாயம், சட்டம் உள்ளிட்ட அனைத்திலும் 7.5 சதவீத இட ஒதுக் கீட்டினைக் கொண்டு வந்ததுடன் இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் உயர் கல்வியில் சேர்க்கைப்பெறும் மாண வர்களுக்குக் கல்வி கட்டணம், விடு திக் கட்டணம், பேருந்துக் கட்டணம், உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்கும் என அறிவித்து அதற்காக பொறியி யல் கல்விக்கு மட்டும் 213 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இது மாணவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தாய்உள்ளத்தோடு செய் துள்ள ஒரு மிகப்பெரிய திட்டமாகும்.

'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் இதுவரை 27 இலட்சம் மாணாக்கர்க ளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்போது முக்கிய நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்று பணிபுரிந்து வருகின்றனர். 'புதுமைப்பெண்' திட் டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்ற னர். அதேபோல் இவ்வாண்டு தொடங்கப்பட்ட 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின் றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு மாண வர்களைத் தயார் செய்ய துணை முதலமைச்சர் அவர்களால் போட் டித்தேர்வு பயிற்சி மையம் மதுரை யில் தொடங்கப்பட்டுள்ளது. அதே போல் மற்ற இடங்களிலும் தொடங்கப்படவுள்ளது. இதனை மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கலந்துரையாடல்!

இன்றைய கூட்டத்தில் தொழில் முனைவோர், நிர்வாகத்தினர், ஆசிரி யர்கள், மாணவர்கள், பெற்றோர் கள் போன்ற அனைவரின் கருத்துக்க ளும் கேட்கப்பட்டன. மேலும் 'நான் முதல்வன்' பயனாளிகளுட னும், 7.5 சதவீத அரசின் ஒதுக்கீடு பெற்ற மாணவர்களுடனும் 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப்பெண்' பயனா ளிகளுடனும் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தெரி விக்கப்பட்ட அரிய பல கருத்துக்கள் பயனுள்ளதாக அமைந்தன. இவை கள் சேகரிக்கப்பட்டு பதிவு செய்ப் பட்டுள்ளது. மேற்படிக் கருத்துக்கள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு தேவைக்கேற்ப மாணவர்க ளுக்கு பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளுடனான கலந்தாய்வில் தெரிவித்துள்ள கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றிட நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

இன்று திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் நடைபெற்றது போன்றே மதுரை, கோவை மற்றும் சென்னை ஆகிய மண்டலங்களிலும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்படி யான பல்வேறு திட்டங்களினால் உயர்கல்வியின் தரத்தில் இந்தியா விலே தமிழ்நாடு முதன்மை மாநில மாகத் திகழ்கிறது.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரி வித்தார்.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் கோபால், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி. சுந்தரவல்லி, தொழில் நுட்ப கல்வி ஆணையர் ஆப்ரஹாம், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் மற்றும் உயர்கல்வி மன்றத்தின் துணைத்தலைவர் விஜயகுமார் மற்றும் உயர்கல்வித்துறையின் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

ரூ.13 கோடியில் 2-வது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

கோவை, நவ.14-

கோயம்புத்தூர் மருத்து வக்கல்லூரி மருத்துவமனை யில் நேற்று முன்தினம் (12.11.2024) ரூ.13 கோடி மதிப்பில் 2வது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியினை மருத் துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர் கள் பொதுமக்கள் பயன் பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநக ராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றி செல்வன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நா.கார்த் திக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி.மீனா லோகு, மாமன்ற உறுப்பி னர் திருமதி.சுமா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்து வமனை முதல்வர் மரு.நிர் மலா, இ.எஸ்.ஐ மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், மருத்துவ கண்காணிப்பா ளர் கண்ணதாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்ததா வது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின் படி கோயம்புத்தூர் மருத்து வக்கல்லூரி மருத்துவமனை யில் பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் தொடங்கி வைக்கப்பட்டு வருகின்றது. அந்த வகை யில் ஐப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியின் கீழ் (JICA) ரூ.13 கோடி மதிப் பீட்டில் புதிய 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி கோயம்புத்தூர் அரசு மருத் துவக்கல்லூரி மருத்துவம னையில் தொடங்கி வைக் கப்பட்டது.

தற்போது உள்ள எம். ஆர்.ஐ ஸ்கேன் கருவி 2018-இல் நிறுவப்பட்டது. எம். ஆர்.ஐ ஸ்கேன் கருவிக்கு அதிக அளவிலான நோயா ளிகள் தினந்தோறும் வரு கின்ற காரணத்தாலும், கூடுதலான தொழில்நுட் பம் வாய்ந்த கருவிவேண்டு மென்ற காரணத்தாலும், இப்புதிய எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. புற நோயாளிகளுக்கு எம்.ஆர். ஐஸ்கேன் செய்வதற்கு தற் போதைய காத்திருப்பு காலம் சுமார் 2 முதல் 3 நாட்கள் ஆகிறது.

மேலும், ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேன் பரிசோதனைக்கு 40 நிமிடங்கள் ஆகும். ஒரு நாளைக்கு 30 முதல் 32 ஸ்கேன் மட்டுமே எடுக்க முடியும். ஆனால் தற்போது தொடங்கி வைக்கப்பட் டுள்ள கருவியில் ஒரு ஸ்கேன் பரிசோதனைக்கு 20 நிமிடத்திற்குள்ளாகவே ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்துகொள்ளமுடியும். இதன்மூலம் அதிக எண் ணிக்கையில் ஸ்கேன் பரி சோதனை செய்யமுடியும் என்பதால் காத்திருப்பு காலம் குறையும். நரம்பி யல், இதயநோய் மற்றும் புற்றுநோயியல் சோதனைக ளில் பாதிப்புகளை கண்ட றிய புதிய 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி மிக உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை தொடர்ந்து தந்துகொண்டு இருக்கிறார். கோயம்புத்தூர் அரசு மருத் துவக் கல்லூரியில் இளங் கலை மருத்துவ படிப்பு இடங்களை 150லிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டு, ரூ.85.55 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டது.

ரூ.10 கோடி மதிப்பீட் டில் மேம்படுத்தப்பட்ட சீமாங் மையம், ஜப்பான் பன்னாட்டு நிதி ஆதாரத் தின் கீழ் ரூ.285.96 கோடி மதிப்பீட்டில் புதிய பன்ன டுக்கு உயர் சிறப்பு மருத் துவ கட்டிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.

இக்கட்டடத்தின் 6 வது தளத்தில் ஆப்ரேஷன் அரங் கம் முடிவுறும் தருவாயில் இருக்கிறது. விரைவில் இத் தளம் பயன்பாட்டுக்கு வர இருக்கின்றது. இந்த புதிய மருத்துவமனை கட்டடம் பயன்பாட்டில் உள்ளதால் புறநோயாளிகளின் எண் ணிக்கையும் அதிகரித்துள் ளது. 2021 தொடக்கத்தில் தினந்தோறும் வரும் புற நோயாளிகளின் எண் ணிக்கை 3000 இருந்தது. தற்போது 4500 ஆக உயர்ந்து இருக்கிறது. இம்ம ருத்துவமனையில் மருத்துவ சேவை பெறும் மக்களின் எண்ணிக்கை உயர்ந் திருக்கிறது.

ரூ.1.5 கோடி மதிப்பீட் டில் பச்சிளம் குழந்தை தீவி ரசிகிச்சைப் பிரிவு, ரூ.92.48 இலட்சம் மதிப்பீட்டில் தீவிர சிகிச்சைப் பிரிவில் நவீன மருத்துவ உபகரணங் களுடன் கூடிய ஆக்சிஜன் படுக்கைகள் கொண்ட செவிலியர் கண்காணிப்பு மையமும் மற்றும் பன்முக உயர்தர தீவிர சிகிச்சைப் பிரிவு, ரூ.10இலட்சம் மதிப் பீட்டில் புதிப்பிக்கப் பட்ட Toxicology ICU, ரூ.45இலட்சம் மதிப்பீட் டில் புனரமைக்கப் பட்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, ரூ.45 இலட்சம் மதிப் பீட்டில் 3 KL திரவ மருத் துவ ஆக்சிஜன் டேங்க், ரூ.57.90 இலட்சம் மதிப்பீட் டில் மறுசீரமைக்கப்பட்ட தீவிர அறுவை சிகிச்சைப் பிரிவு, ரூ.25இலட்சம் மதிப் பீட்டில் தொலைமருத்து வம் (Tele PICU), ரூ.35இலட்சம் மதிப்பீட் டில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு அதிநவீன சிகிச்சை உபகரணங்கள், ரூ.1.18கோடி மதிப்பீட்டில் கட்டண வார்டு, ரூ.18இலட்சம் மதிப்பீட் டில் புதிய தகவல் மையம், ரூ.15.46 இலட்சம் மதிப்பீட் டில் எலிபசை, விஷமுறிவு, பிளாஸ்மா குருதி மற்றும் சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையம், ரூ.12 கோடி - PET CT, ரூ.1.5கோடி மதிப்பீட்டில் அதி நவீன இரத்தஉள்நோக்கு கருவி அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி அமைவதற்கு முன், சென்னை மற்றும் மதுரையில் மட்டும்தான் புற்றுநோயை துல்லியமாக கண்டறியும் PET CT கருவி இருந்ததது. தற்போது கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், காஞ்சிபுரம், நெல்லை ஆகிய 5 இடங்க ளிலும் அமைக்கப்பட்டுள் ளது.

மேலும், இம்மருத்தும னையில் பாதாளசாக்கடை, சாலை சீரமைப்பு பணியும் செய்ய கோரிக்கை வைக் கப்பட்டது. உடனடியாக ஏற்றுக்கொண்ட தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள் விரைந்து செயல்படுத்து வோம் என்று அறிவுறுத்தினார்கள்.

அதன்படி இம்மருத்தும னையில் பாதாளசாக்கடை, சாலை சீரமைப்பு பணிக்கு ரூ.9கோடி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது. மிக விரை வில் இப்பணிகள் தொடங் கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாமல் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் நீராவி சலவை வசதிகள் அமைக் கும் பணியும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் பழைய மருத் துவமனைக்கு மற்றும் புதிய தாக கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனை இரண்டையும் இணைக் கும் வகையில் இணைப்பு பகுதி கட்டும் பணியும் நடைபெறவுள்ளது. இது போன்று பல்வேறு வளர்ச் சித் திட்டப்பணிகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்து வமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் நடை பெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் 708 நகர்ப் புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 72 நகர்ப் புற நலவாழ்வு மையங்கள் அறிவிக்கப்பட்டன. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று சென்னையிலிருந்து 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத் தார்.

அதில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் 45 இடங் களிலும், மேட்டுப்பாளை யம் நகராட்சி - 1, பொள் ளாச்சி நகராட்சி - 2, வால்பாறை நகராட்சி - 1 ஆகிய 49 இடங்களில் திறந்து வைத்தார்கள். ஒவ்வொரு நகர்ப்புற நல வாழ்வு மையங்களிலும், ஒரு மருத்துவர், ஒரு செவி லியர், ஒரு சுகாதார ஆய்வா ளர், ஒரு உதவியாளர் என நான்கு பணியிடங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான மாவட்ட ஹெல்த் சொசைட்டியின் மூலம் ஒப்பந்த அடிப்படை யில் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட னர். நகர்ப்புற நல வாழ்வு மையங்களை காலை 8 மணிக்கு திறக்கப்பட்டு, 12 மணிவரையிலும், பிற்பகல் 4 மணி முதல் 8 மணி வரை யிலும் செயல்படவேண் டும். நான் போகின்ற இடங் களில் எல்லாம் இந்த நலவாழ்வு மையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறேன்.

அதன்படி, நேற்று முன்தினம் மாலை, கோயம் புத்தூர் மாநகர பகுதிகளில் உள்ள 4 நகர்ப்புற நல வாழ்வு மையங்களில் ஆய்வு செய்யப்பட்டது. மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிக ளில் காலை மாலை வேளை களில் மக்கள் மருத்துவ சேவை பெறும் வகையில் தான் இவை திறந்து வைக் கப்பட்டுள்ளன. எனவே, காலை, மாலை இரண்டு நேரங்களில் மருத்துவம னைகள் இயங்குகிறதா என் பதை கண்காணிக்க வேண் டும் என தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட சுகாதார அலுவ லர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. மாலையில் மருத்துவமனை திறக்கப்ப டாமல் இருந்தாலும், தக வல் தெரிவிக்காமல் பணிக்கு வராமல் இருபவர் களையும் உடனடி யாக பணியிலிருந்து விடுவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்படும் பார்வை நேரம் குறித்த விளம்பர பெயர்பலகைகள் வைக்க உத்தரவிடப்பட் டுள்ளது.'

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் செய்தியாளர்களி டம் தெரிவித்தார்.

சேலத்தில். துணை முதலமைச்சரின் பிறந்த தினத்தையொட்டி. தி.மு.க. இளைஞரணி 4வது மண்டல ஆலோசனைக்கூட்டம் சேலம் மாவட்ட தி.மு.க அலுவலகம். கலைஞர் மாளிகையில், மாநில துணைச்செயலாளர் சீனிவாசன் தலைமையில். சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் அருண்பிரசன்னா, மேற்கு மாவட்ட அமைப்பாளர் மணிகண்டன் முன்னிலையில் சேலம் மாநகர அமைப்பாளர். கேபிள் சரவணன் வரவேற்று பேசினார்.

கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி,மகளிர் தொண்டர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களிடம், மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை படிவத்தினை, மாவட்டக் கழகச் செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சருமான சி. வெ. கணேசன் வழங்கினார், சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ , மாவட்ட கழக துணை செயலாளர் கள்,ஆர். எஸ் .எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் இந்துமதி ,மாவட்ட அமைப்பாளர் ஜெயந்தி நடராஜன், துணை அமைப்பாளர் ஞான சௌந்தரி, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் ஒன்றியம், கவுண்டச்சிபுதூர் ஊராட்சிக்குட்பட்ட கொண்டரசம்பாளையம் பொதுவீதியில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2024-25 மூலம் ரூ. 17.00 இலட்சம் மதிப்பில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியை என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலை வரும், ஒன்றிய கழக செயலாளருமான எஸ்.வி.செந்தில்குமார், துணைத்தலைவர் ஈ.சசிக்குமார் உள்பட இந்நாள்முன்னாள் மக்கள் பிரதிநி திகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.